செய்தி வெளியீடு எண். 05-2017 நாள்: 02.10.2017

# விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் பனங்குப்பம் ஊராட்சியில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு, சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

*****

விழுப்புரம் மாவட்டம் கோலியனூர் ஊராட்சி ஒன்றியம் பனங்குப்பம் ஊராட்சியில், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு, சிறப்பு கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (02.10.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கிராம வளம் மற்றும் தூய்மைக்கான இரு வார இயக்கத்தினை அக்டோபர் 1 முதல் 15 வரை சிறப்பிக்க கொண்டாடுவது குறித்து விவாதித்தல், குடிநீர் சிக்கனமாக பயன்படுத்துதல், பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், கிராம ஊராட்சி வளர்ச்சித் திட்டம், அந்தியோதயா இயக்கம், கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவினம் குறித்து விவாதித்தல், ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், ஆண்டறிக்கை மற்றும் வரவு செலவு, திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற ஊராட்சிகள், கழிப்பறை கட்டி பயன்படுத்தும் பயனாளிகளுக்கு பாராட்டு தெரிவித்தல், குழுக்களுக்கு ஒத்துழைப்பு, கழிப்பறை இல்லாதோர் விவரப்பட்டியல், திறந்தவெளியில் மலம் கழிப்பதால் ஏற்படும் தீமைகள், ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள், பள்ளி கழிப்பறைகள் மற்றும் அங்கன்வாடி மையக் கழிப்பறைகள் பராமரித்தல், திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மையே சேவை இயக்க உறுதிமொழி ஏற்றல், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டப் பணிகள், சாலைகளை சீரமைத்தல், நீர்நிலைகளை பராமரித்தல், சாலை ஓரம் உள்ள வாய்க்கால்களை முறைப்படுத்துதல், சமூக தணிக்கை, மகளிர் திட்டம் ஆகிய பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் முழு சுகாதாரம் மற்றும் டெங்கு காய்ச்சல் உறுதிமொழியினை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஏற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.மகேந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஆஞ்சலோ இருதயசாமி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.சவுண்டம்மாள், டாக்டர்.ஜெமினி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.நாராயணன், திரு.கணேசமூர்த்தி, விழுப்புரம் தனிவட்டாட்சியர் திரு.வேல்முருகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.